**பள்ளிக்கூடம்**

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்- சின்னப்பாப்பா

கல்வித்தோட்டம் தானே அந்தப் பள்ளிக்கூடம்

சின்னப்பாப்பா!

பள்ளிக்கூடம் தொடங்குகிறது - சின்னப்பாப்பா

உனக்கு நல்ல நேரம் பிறக்கிறதே

சின்னப்பாப்பா!

வீட்டுச் செய்தி பேசலாமே - சின்னப்பாப்பா

அங்கு ஏட்டுக் கல்வி கூட படிக்கலாமே

சின்னப்பாப்பா!

அறிவும் ஒழுக்கமும் நிறைவதற்கு –சின்னப்பாப்பா

சிறந்த இடம் தானே அந்த பள்ளிக்கூடம்

சின்னப்பாப்பா!

Du finner sangen på de tamilske barnehagesidene på Tema Morsmål:
http://www.morsmal.no/ta/sanger/sanger-barnehage-tamil/5434-2015-03-01-09-09-31